PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# கும்பகோணம் தாராசுரம் ஐராவதீச்சுரம் கோயில் கலபாத சிற்பங்கள்

**வே.கனிமொழி [1] & முனைவர் வே.லதா[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர்**

**[2]இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்**

**சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

**ஆய்வு நோக்கம்:**

சிற்பக்கலை என்பது பொருத்தமான அளவுகளைக் கொண்டு மிக நுணுக்கமாக அழகாக உருவங்களை செதுக்கப்பட்டு காட்சிபடுத்துவதாகும். அதை காணும் உள்ளங்களை ஈர்ப்பதே சிற்பக்கலையாகும். சிற்பகலை என்பது காண்போரின் கண்ணையும், கருத்தையும் கவரக்கூடியதாக இக்கோயிலின் கலபாத சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. நம் நாடு கலை மற்றும் பண்பாட்டின் சின்னமாக திகழ்வதால் கும்பகோணம் தாரசுரம் ஐராவதீச்சுரம் கோயிலில் உள்ள மிகச்சிறிய அளவில் நுணுக்கமாக (inch) அளாவுகளில் ‘கலபாத சிற்பங்கள்’ செதுக்கப்பட்டுள்ளது. இக்கோயில் உள்ள அனைத்து தூண்களிலும் கலபாத சிற்பங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. மற்றும் கலபாத சிற்பங்களின் முக்கியத்துவம் பற்றின தகவல்களை வளர்ந்து வரும் இளம் தலைமுறையினர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்:**

கும்பகோணம் தாராசுரம் ஐராவதீச்சுரம் கோயில் கலபாத சிற்பங்களில் திருத்தொண்டத்தொகையடியார்களின் வரலாற்றுச் சிற்பங்கள், கட்டடகலை, சிற்பக்கலை, கலபாத தூண்சிற்பங்கள், பல வகை நடன சிற்பங்கள் போன்றவை கலை பண்பாட்டின் அடையாளமாகவும், புராணக்காட்சியை கலபாத சிற்பங்களில் பிரதிபலிக்கக்கூடிய வகையில் கலபாத சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் கலபாத சிற்பங்களின் சிறப்புகளை பல்வேறு தகவல்களை ஆராய்ந்து இந்த கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**முன்னுரை:**

கும்பகோணம் என்னும் ஊர் முற்காலத்தில் ‘பழையாறை’ சோழர்களின் தலைநகரமாக புகழ்பெற்றிருந்தது. பின்பு (கி.பி.1146 முதல் 1163) வரை இரண்டாம் இராசராசசோழன் சோழநாட்டை ஆட்சிப்புரிந்தார். இவரது காலத்தில் தனது பெயரால் “இராசராசேச்சுரம்” என்னும் சிவாலயத்தை கட்டினார். இதன் காரணமாக இவ்வூரை

‘இராசராசபுரம்’ என்று அழைக்கப்பெற்றது. தற்போது தாராசுரம் ஐராவதீச்சுரம் என்றும் அழைக்கப்படுகிறது. இது ஒரு மாடக்கோயில் ஆகும். இக்கோயிலில் உள்ள கலபாத சிற்பங்கள் காண்போரின் கண்களையும், கருததையும் கவரக்கூடிய அளவிற்கு கலபாத சிற்பங்கள் மிக நுணுக்கமாக அழகாக செதுக்கப்பட்டுள்ளது. மற்றும் இக்கோயிலின் புறச்சுவர்களில் திருத்தொண்டத்தொகை அடியார்களின் பெரிய புராண வரலாற்று செய்திக்களை அறிந்து கொள்ளும் வகையில் திருமண்டபங்களிலும், தூண்களிலும் சிற்பக்காட்சிகள் கதை சொல்லும் அளவிற்கு சிற்பங்களை செதுக்கி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கோயிலின் தூண்களிலுள்ள கலபாத சிற்பங்கள் மிகச் சிறிய அளாவில் (1, inch), (1 ½, inch), (2, inch), (2 ½, inch) என்ற அளவுகளில் நுணுக்கமாக கலபாத சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் கலபாத சிற்ப பெருமைகள் இரண்டாம் இராசராசனுக்கே உரியதாகும். தாராசுரம் ஐராவதீச்சுரம் கோயிலின் வரலாற்று சிறப்புமிக்க கோயிலாக திகழ்வதால் யுனெஸ்கோ நிறுவனம் அற்புத சிற்பக்களஞ்சியமாக திகழும் இக்கோயிலுக்கு ‘உலக மரபு சின்னம்’ (UNESCO World Heritage Monument) என்ற தகுதியை அளித்து கௌரவப்படுத்தியுள்ளது.

**கோயிலின் அமைப்பு:**

தமிழகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் நகருக்கு தென்மேற்கில் அரிசிலாற்றின் தென்கரையில் தாராசுரம் ஐராவ்தீச்சுரம் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் கிழக்கு திசையை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் உயரம் 23 மீட்டரும், அகலம் 23 மீட்டரும், நீளம் 63 மீட்டரும் அளவுகளைக் கொண்டு உருவ பீட மேடையின் மேல் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் கோபுரம் தஞ்சை பெரியகோயில் கோபுரத்தைப் போலவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

**வரலாற்றுப் பின்னணி:**

இரண்டாம் குலோத்துங்கனின் மகன் இரண்டாம் இராசராச சோழனுக்கு ஆசிரியராக சேக்கிழார் பெருமானும், கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரையும் பெற்ற காரணத்தால் இம்மன்னன் பெரிய புராணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டதால் இவர் கட்டிய தாராசுரம் ஐராவதீச்சுரம் கோயில் (இராசராசேச்சுரம்) என்று இவர் காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது. மற்றும் இக்கோயிலின் பெரியபுராணத்தை விளக்கும் வகையில் சிற்பங்களின் வாயிலாக காட்சிப்படுத்தியுள்ளார். இதனைப் போற்றும் வகையில் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியில் தாராசுரம் ஐராவதீச்சுரம் கோயிலின் பெருமையை விளக்கியுள்ளார்.

**கலபாத சிற்பங்கள்:**

இக்கோயிலின் சிறப்பு சிற்பமாக தூண்களில் கலபாத சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. இப்புடைப்பு சிற்பமானது அளவில் மிகச் சிறியதாகவும் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அழகாக அச்சில் வார்த்ததைப் போல் கற்சிற்பங்கள்

ISSN: 2582-9513

செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தை ‘கலபாத சிற்பம்’ என்று கூறப்படுகிறது. இக்கோயிலுள்ள அனைத்து தூண்களிலும் கீழ்பகுதியிலிருந்து மேல்பகுதி வரை நான்கு பக்கங்களிலும் (inch) கை விரல் அளவுகளில் கலபாத சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளது. பலவகையான சிவப்பெருமானின் சிற்பங்கள், நடனசிற்பங்கள், நர்த்தன் கணபதி சிற்பம், பெண்கள் சிற்பம், பெண்கள் இசைக் கருவிகளை இசைத்துக்கொண்டு நடனமாடும் சிற்பங்கள் மற்றும் சிற்பக்கலையில் கற்பனை திறனைக் காட்டும் ஒரு தலையில் மூன்று பெண் உருவங்கள் என்று பல வகையான கலபாத சிற்பங்களால் தூண்களை அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கலபாத சிற்பமும் ஒரு கதையையும், புராணத்தையும் கூறும் வகையில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ள இக்கோயிலுள்ள கலபாத சிற்பங்களைப் போல் உலகில் எங்கும் இல்லை. இதை பார்க்கும் நம் கண்களையும் உள்ளங்களையும் கவரும் வகையில் காட்சியளிக்கிறது.

**கலபாத நாட்டிய (நடன) சிறபங்கள்:**

இக்கோயிலில் அதிகமான கலபாத சிற்பங்கள் நாட்டிய (நடன) கலையை எடுத்தது கூறும் வகையில் சிற்பங்கள் கலைநயத்துடன் செதுக்கப்பட்டுள்ளது. நடராஜர் நடன சிற்பம், பெண் நடன சிற்பம், ஆடல் மகளிர் சிற்பங்கள், ஒரு பெண் கையை தரையில் ஊன்றி கால்களால் வணக்கம் செய்யும் சிற்பம், இரண்டு பக்கத்திலும் மேளம் இசைத்து பெண் நடனச் சிற்பம், ஒரு பெண் சிற்பம் நெற்றியில் கத்தியை வைத்தும் மற்றும் ஒரு கையில் கத்தியை நீட்டிய அதன் மேல் ஒரு குரங்கை நிற்க வைத்து மாயதந்திரம் (மேஜிக்) காட்டுவது போன்ற சிற்பம், பெண்கள் இசைக் கருவிகளை இசைத்துக்கொண்டு நடனமாடும் சிற்பம் என்று பல வகையான நடன சிற்பங்கள் இசை, நடனம், புராணக்கதையை விளக்கும் வகையில் கலபாத நடன சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**கலபாத சிற்பங்களில் இசைக்கருவிகள்:**

மத்தளம், உடுக்கை, குடமுழவம், குழல், கைத்தாளம், வீணை, பெரிய இசைத்தாளம் போன்ற இசைக்கருவிகளை நடனமாடும் பெண்கள் பயன்படுத்தும் கலபாத சிற்பக்காட்சி நடனத்தைப் போற்றும் வகையில் செதுக்கப்பட்டுள்ளது. இசையும் நடனமும் இணைந்து காட்சியளிக்கின்றது.

**புடைப்பு சிற்பங்களில் புராணக் காட்சிகள்:**

கோயிலின் சுற்றுப்புறச் சுவற்றில் உள்ள புடைப்பு சிற்பக்காட்சி புராணங்களின் கதையை நினைவுபடுத்தும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் காமதகன காட்சி, பார்வதி தபஸ் செய்துகொண்டு இருக்கும் காட்சி, ஈஸ்வரன் நந்தியில் அமர்ந்திருக்கும் காட்சி, வாலி சுக்ரீவ சண்டை காட்சி, வானவீதியில் தேவர்கள் கைகூப்பி வணங்கி நிற்கும் காட்சி, ஸ்ரீராமன் அம்பு எய்தும் காட்சி, காடுகளில் காட்டு மிருகங்கள் யானை, யாளி, சிங்கம் போன்ற விலங்குகளின் சிறு உருவங்கள். செடி, கொடிகளின்

இடையே தெரிவது போன்ற காட்சி, புடைப்பு சிற்பங்களின் வாயிலாக புராணங்களை நினைவு கூறும் வகையில் அழகாக சிற்பங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஐராவத வெண்மையானை:**

தாராசுரத்திற்கு "ஐராவதேஸ்வரம்" என்பதற்கு புராணக்கதை உள்ளது. முன்னோரு காலத்தில் தூர்வாச முனிவரின் கோபத்துக்கு ஆளாகிய (ஐராவதம்) வெள்ளை யானை சாபம் பெற்றது. சாபத்தினால் யானையின் வெண்மை நிறத்தை ஐராவதம் இழந்தது. தாராசுரம் இறைவனை வணங்கி வழிபட்டு (ஐராவதம்) யானை அதன் வெண்மை நிறத்தை அடைந்தது. இந்த நிகழ்வின் நினைவாக கோயிலின் உட்புறத்தில் இந்திரன் அமர்ந்திருக்கும் அருகில் ஐராவதத்தின் (யானை) சிலையும் உள்ளது. "ஐராவதம் என்னும் இந்திரனுடைய வெள்ளை யானை இத்தலத்தை பூஜித்ததால் இத்தல இறைவனுக்கு ஐராவதீஸ்வரர் என்ற பெயர் ஏற்பட்டது என்று "ஐராவதீஸ்வரமாண்மியம்" கூறுகிறது.

**முடிவுரை:**

கும்பகோணம் தாரசுரம் ஐராவதீஸ்வரம் கோயிலின் தூண்களின் நான்கு பக்கங்களிலும் கீழிருந்து மேல்ப்பகுதி வரையிலும் கலபாத சிற்பங்களால் தூண்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் இசைக்கலை, நடனக்கலை, புராணக்கதை இவற்றையெல்லாம் விளக்கும் விதமாக கலபாத சிற்பங்களால் சோழ மன்னன் இரண்டாம் இராசராசன் காட்சிப்படுத்தியுள்ளார். இம்மனனின் ரசனையை நாமும் கண்டு களிப்போம். சோழர்காலத்தில் கட்டடக்கலை, சிற்பக்கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. காண்போர் கண்களுக்கு விருந்து அளிக்கும் விதமாக கலபாத சிற்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கோயிலின் 50 சிற்பங்களுக்குரிய கல்வெட்டுகள் அழியாமல் உள்ளது. மற்ற சிற்பங்களின் கல்வெட்டுகள் சிதைந்துள்ளது. சோழர் கால கலைக்கு இக்கோயில் சான்றாக திகழ்கின்றது. கலபாத சிற்பங்கள் சோழர் கால கோயில்களில் அதிகமாக காணப்படுகின்றது. இவை சிற்பக்கலையின் வளர்ச்சியின் உச்சநிலையை காணமுடிகின்றது.



**1.கலபாத நடன சிற்பங்கள்**



**2.கலபாத மல்யுத்த சிற்பங்கள்**

ISSN: 2582-9513



3.கலபாத புராணக்காட்சி



4. கலபாத ஒரு தலையில் மூன்று பெண்கள் வணக்கம் செலுத்தும் காட்சி



5. கலபாத சிற்பத்தில் மனிதனை புலி தாக்கும் காட்சி



6. கலபாத தூண் சிற்பம்

**துணைநூற் பட்டியல்**


1. தென்னாட்டுச் செல்வங்கள் (பாகம் -1), அமரர் சில்பி, சென்னை, 2012, ப.123.
2. மேலது, ப.138.
3. பன்னிரு திருமுறை வரலாறு, வித்துவான் க.வெள்ளைவாரணன், சென்னை, 2011, ப.948.
4. மேலது, ப.951.
5. தாராசுரம் ஐராவதீசுவர் திருக்கோயில் (இராசராசசேச்சுரம்), முனைவர் குடவாயில் பாலசுப்பிரமனியன், தஞ்சாவூர், 2017, ப.2.
6. மேலது, ப.3.
7. சோழர்கள் (பாகம் 2), கே.ஏ.நீலகண்டசாஸ்திரி, சென்னை, 2007, ப.950.

8. கோடிச் சிற்பங்கள் கொண்ட பெருங்கோயில் இராசராசபுரம் – இராசராசேச்சுரம் தாராசுரம் – ஐராவதீச்சுரம் வரலாறு, டாகடர் க.தங்கமுத்து, கும்பகோணம், 2004, ப.2019.
9. சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும், முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன், தஞ்சாவூர், 2010, ப.162.